Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

4

# சங்க இலக்கிய நூல்களில் யாழ்

**ச.சுவாமிநாதன்**

**தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, திருவையாறு.**

**ஆய்வு நோக்கம்:-**

சங்க காலம் என்பது கி.மு.**500** முதல் கி.பி.**200** வரை உள்ள காலகட்டம் ஆகும். அக்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் சங்ககால இலக்கியங்களாகும். இவ்விலக்கியங்கள் யாவும் கவிதை நயமும், சொல் நயமும் மிகுந்து காணப்படுகிறது. சங்க நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற நூல்கள் அன்றைய மக்களின் வாழ்வியல், பண்பாடு, இசை, நடனம், நாடகம் போன்ற பல பல்வேறுபட்ட பலதரப்பட்ட கலாச்சாரத்தினை எடுத்துரைக்கும் வரலாற்றுச் சுவடிகளாக விளங்குகிறது. இவற்றினை வெளிக்கொணர்ந்து இசை மாணவர்களுக்கு எடுத்துக்கூறும் நோக்கத்தில் இவ்வாய்வுக் கட்டுரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுச் சுருக்கம் :**

தொல்காப்பியம் முதல் சங்க நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் தொன்மையான கருவியான யாழ்க்கருவி பற்றிய குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களில் காணப்படுகின்ற யாழ் பற்றிய செய்திகள், அதன் உறுப்புகள் போன்றவை பற்றி இதில் ஆராய்ந்து தரப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்** :

யாழ், வில்யாழ், சீறியாழ், பேரியாழ், யாழ் உறுப்புக்கள், சுருதி சேர்க்கும் முறை, பாணன், விறலியர்.

**முன்னுரை :**

தொல்காப்பியத்தில் மக்கள் வாழ்விடங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாகப் பகுத்திருந்தனர். குறிஞ்சி என்பது மலையும், மலை சார்ந்ததாகவும், முல்லை என்பது காடும், காடு சார்ந்ததாகவும், மருதம் வயலும், வயல் சார்ந்ததாகவும், நெய்தல் கடலும், கடல் சார்ந்ததாகவும், பாலை மணலும், மணல் சார்ந்ததாகவும் பிரிக்கப்பட்டு இதன் அடிப்படையில் மக்களின் வாழ்வியல் நெறிமுறைகள் அமைந்திருந்தன.

சங்க இலக்கிய நூல்கள் இம்மக்களின் வாழ்வியலில் இணைந்து காணப்பட்ட இசை,

இசைக்கருவிகள் மற்றும் நடனம் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றன. இசை மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு காலக்கட்டத்திலும் காணப்பட்டக் கலையாகும். இந்த இசை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவை இசைக் கருவிகளாகும். குறிப்பாக தென்னிந்திய இசை வரலாற்றில் நரம்புக் கருவிகள் இசை வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருந்துள்ளதனை இசை இலக்கண நூல்கள் பறைசாற்றுகின்றன.

இந்த நரம்புக் கருவிகள் எண்ணற்றவையாகும். நரம்புக் கருவிகளின் முன்னோடி யாழ் கருவியாகும். இந்த யாழ் எனும் நரம்புக்கருவி பற்றியக் குறிப்புகள் சங்க இலக்கிய நூல்களில் பெருமளவில் காணப்படுகின்றன. இவற்றினை ‘சங்க இலக்கிய நூல்களில் யாழ்’ எனும் தலைப்பில் இக்கட்டுரை தரப்பட்டுள்ளது.

**தொல்காப்பியம் :**

சங்க நூல்களுக்கு முன்னதாகவே தொல்காப்பியத்தில் யாழ்க் கருவி பற்றிய குறிப்பு காணப்படுகிறது. தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர் ஆவார். இது ஒரு இசை இலக்கண நூல் ஆகும். இதில் ஐவகை நிலத்திற்குரிய இசைக்கருவிகளை குறிப்பிடுமிடத்து யாழ்க்கருவி பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.

தெய்வ முணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ
இவ்வகை பிறவும் கருவென மொழிப

ஐவகை நிலத்திற்குரிய யாழ்க்கருவியாக,

குறிஞ்சி - குறிஞ்சி யாழ்
முல்லை - முல்லை யாழ்
மருதம் - மருத யாழ்
நெய்தல் - விளரி யாழ்
பாலை - பாலை யாழ்

**பத்துப்பாட்டு :**

சங்க நூல்களில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்தும் பத்துப்பாட்டு என அழைக்கப்படுகின்றன. இவை

பல ஆசிரியர்களால் பல்வேறு காலக்கட்டங்களில் எழுதப்பட்டவையாகும். இந்த பத்துப்பாட்டிற்கு உரை எழுதியர் நச்சினார்கினியர் ஆவார். இவற்றில் பல்வேறு வகை யாழ்கள், அவற்றின் உறுப்புக்கள் ஆகியவை பற்றிய செய்திகள் நிறைந்து காணப்படுகிறது.

பத்துப்பாட்டு நூல்களில் ஆற்றுப்படுத்துவதாக வரும் நூல்கள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய நான்கு நூல்களாகும்.

ஆற்றுப்படை என்றால் வழிபடுத்துதல் என்பது பொருள். அதாவது, ஒரு புலவர் மற்றொரு புலவரை வழி நடத்திச் செல்ல எடுத்துரைப்பது ஆற்றுப்படையாகும்.

இந்த பத்துப்பாட்டு நூல்கள் யாவற்றிலும் யாழ் கருவி பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. இறைவனை யாழிசைத்துப் வணங்கும் செய்தி, யாழ் உறுப்புக்கள், வில்யாழ், சீறியாழின் அமைப்பு, யாழிசைப்பதால் வரும் பலன், யாழ் சுருதி சேர்க்கும் விதம், அதன் ஒலி, பாணன், விறலியர் பற்றியச் செய்திகள் நிறைந்து காணப்படுகின்றன.

திருவாவினன்குடியில் இறைவனை வணங்குபவர்கள் யாழிசை பாடும் செய்தி காணப்படுகிறது.

செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடைய நெஞ்சின்
மென்மொழி மேவலர் ரின்னரம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் மாவி (திரு **140-143)**

இதில் யாழின் அமைப்போடு அதனை இசைப்பதால் நோயின்றி வாழ்வு பெறலாம் என்பதனையும் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகியவற்றில் யாழ் உறுப்புக்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. இதனால் யாழின் உருவயமைப்பினை அறிய முடிகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டே பின்வந்த விபுலானந்த அடிகள் யாழ் கருவியினை உருவாக்கினார் எனலாம்.

குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்
விளக்கழல் உருவின் விசியுறு பச்சை
யய்யா இளஞ்சூல் செய்யோள் அவ்வயிற்
றைதுமயிற் ஒழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை

அளைவாழ் தூர்ந்த துரப்பமை ஆணி
எண்ணாள் திங்கள் வடிவிற் றாகி
அண்ணா இல்லா அமைவரு வறுவாய்ப்
பாம்புஅணந் தன்ன ஓங்கிய மருப்பின்
மாயோள் முன்கை ஆய்தொடி கடுக்கும்
கண்கூ டிருக்கைத் திண்பிணி திவவின்
ஆய்திணை அரிசி அவைய லன்ன
வேய்வை அன்ன விரலுளர் நரம்பின்
கேள்வி போகிய நீள்விசித் தொடையல்
மணங்கமழ் மாதரை மண்ணி அன்ன
அணங்கு மெய்ந்நின்ற அமைவரு காட்சி (பொருநரா : **4 - 20)**

இதில் யாழ் உறுப்புக்களாக பத்தல், பச்சை, போர்வை, ஆணி, வறுவாய், மருப்பு, திவவு, நரம்பு போன்றவை அதன் அமைப்போடு கூறப்பட்டுள்ளன.

இதில் யாழ் வகைகளில் ஒன்றான சீறியாழின் அமைப்பு மற்றும் வாசிக்கும் முறை பற்றி தரப்பட்டுள்ளது.

பொன் வார்ந்தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரல் சிறுயாழ் இடம்வயின் தழீரு
நைவளம் பழுதிய நயம்தெறி பாலை
கைவலி பாண்மகன் கடன் அறிந்து இயக்க(சிறு:**34-37)**

மேலும் யாழ் இசைக்கருவியின் உறுப்புகள் பற்றியும் காணப்படுகிறது.

பைங்கண் ஊகம் பாம்புபிடித் தன்ன ( சிறுபா : **221)**

அங்கோட்டுச் செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின்
மணிநிரைத் தன்ன அமைப்பின் வாயமைத்து
வயிருசேர் பொழுகிய வகையமை அகளத்துக்
கானக் குமிழின் கனிநிறம் கடுப்பப்
புகழ்வினைப் பொலிந்த பச்சையோடு தேம்பெய்து
அமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பிற்
பாடுதுறை முற்றிய பயன்தெரி கேள்வி (சிறுபா:**222 – 228)**

பெரும்பாணாற்றுப்படையில் யாழின் முதல் இசைக் கருவியான வில்யாழ் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

புறங்கோட்டு தொடுத்த மாற்புரி நரம்பின்
வில்யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளை சைத்தோர்க்கும் (பெ:**81-83)**

குமிழின் உட்பொய்யாகிய கொம்பிடத்தே வளைத்துக் கட்டின மரற்புரி நரம்பினைக் கொண்ட வில்யாழில் குறிஞ்சிப் பண்ணை இசைக்க வண்டுகள் கேட்கும் செய்தி கொடுக்கப்பட்டுள்ளது.

மலைபடுகடாம் நூலில் இதில் பேரியாழின் உறுப்புக்களான வார்கட்டு, நரம்பு, ஆணி, யாப்பு, பத்தல், உந்தி, கோடு போன்றவை பற்றித் தரப்பட்டுள்ளது.

அகடு சேர்பு பொருந்தி அளவினில் திரியாது
கவடுபட கவைஇய சென்று வாங்கு உந்தி
நுணங்கு அறம் நுவறிய நுண்நீர் மாமை
களங்கனி அன்ன கதழ்ந்து கிளர்உருவின்
வணர்ந்து ஏந்து மருப்பின்வள் உயிர் பேரியாழ் (ம:**33-37)**

முல்லைப்பாட்டில் யாழ் இசைப் போன்று வண்டுகள் ரீங்கரிக்கும் என்ற செய்தி காணப்படுகிறது.

அருங்கடி மூதூர் மருங்கில் போகி
யாழிசை இனவண்டு ஆர்ப்ப(மு:**7-8)**

மதுரைக்காஞ்சியில் யாழ் வாசித்தாற் போல பாடும் விறலியர் என்ற குறிப்பு காணப்படுகிறது.

நெடுநல்வாடையில் யாழ் இசைக் கருவி சுருதி சேர்க்கும் முறை குறிப்பிடப்பட்டுள்ளது. குளிர்ச்சி காரணமாக ஆடல் மகளிர் தாம் இசைத்துப் பாடும் யாழினை தனது மார்பகத்தே தேய்த்து சுருதி சேர்ப்பர் என்ற செய்தி காணப்படுகிறது.

வாடன் மகளிர் பாடல்கொளப் புணர்மார்
தண்மையிற் றிரிந்த வின்குரற் றீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்(நெடு:**67-70)**

குறிஞ்சிப்பாட்டில் யாழிசையானது வண்டுகள் ஆரவாரிக்கும்படி உள்ளது என்றும்,

நட்டராகம் முற்றுப் பெற்ற பாலை யாழை இசைப்பதில் வல்லவனான பாணன் என்ற குறிப்பும் காணப்படுகிறது.

நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கைகவர் நரம்பி னிம்மென விமிரு
மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த(குறி:**146-148)**

பட்டினப்பாலை நூலில் மகளிரின் வெறியாட்டத்தில் யாழ் இசைக்கும் செய்தியும், போரில் தோல்வியுற்ற நாட்டின் நிலையினைக் குறிப்பிடுகையில் யாழ், முழவு போன்ற இசைக் கருவிகளின் ஒலி இல்லாமல் அச்சம் மட்டுமே காணப்படும் எனும் செய்தியில் யாழ் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.

குழலகவ யாழ் முரல
முழவதிர முரசியம்ப
விழவறா வியலாவணத்து(ப:**156-158)**

**எட்டுத்தொகை :**

பல புலவர்களால் எழுதப்பட்டு, பிற்காலத்தில் ஒன்றாக தொகுப்பட்டதாகும். ஏறத்தாழ **2352** பாடல்களை எழுநூறு புலவர்கள் பாடியுள்ளனர். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்ற எட்டு நூல்கள் அடங்கியது எட்டுத்தொகையாகும். இதிலும் யாழ் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன.

நற்றிணையில் பாணன் கையிடத்து அடங்கிய சீறியாழ், பாணனது யாழிசை துன்பத்தை நீக்கக்கூடியது, சீறியாழிசை இசைத்துக் கொண்டே பாணன் குறிஞ்சிப் பண்ணைப் பாடுவது, பாணன் தலைவியினால் தலைவனிடம் தூது செல்லுதல் போன்ற செய்திகள் காணப்படுகின்றன.

நெய்வார்ந்தன்ன துய்யடங்கு நரம்பின்(நற்:**300)**

குறுந்தொகையில் பாணர்கள் யாழிசைப்பதில் வல்லவர்களாவும், வாழ்வில் வறுமையுற்றவர்கள் எனவும் 'வறுமையுற்ற யாழிசைக்கும் பாணர் குடியிரைது' என குறிப்பிடப்படுகின்றனர். படுமரத்து மோசிகீரனார் புலவர் பாடிய மருதத்திணை பாட்டின் மூலம் பாணர்கள் யாழிசைப்பதில் மட்டுமின்றி சொல்லாற்றலில் வல்லவர்கள் என்பதும் தெரிய வருகிறது.

ஐங்குநூறில் ஐவகை நிலத்தின் அடிப்படையில் யாழ் கருவி குறிப்பிடப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலத்தில் குறிஞ்சி யாழும், மருத நிலத்தில் மருத யாழும், நெய்தல் நிலத்தில் விளரியாழும்,

முல்லை நிலத்தில் முல்லையாழும், பாலை நிலத்தில் செங்கோட்டு யாழும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தலைவியின் இனிய சொற்கள் யாழிசைக்கு ஒப்பிடப்பட்டும், பாணன் தூது செல்பவனாகவும், சொற் திறன் மிகுந்தவனாகவும், நற்பண்புகள் பாணனது யாழிலிருந்து எழும் ஓசைக்கு ஒப்பிட்டும் கூறப்பட்டுள்ளது. பாணன் சீறியாழ் இசைப்பது காட்டப்பட்டுள்ளது.

கைவல் சீறியாழ்ப் பாணநுமரே(ஐங்:472)

பதிற்றுப்பத்தில் வென்ற நரம்பின் இசையோடு பொருந்த இனிய குரலால் பாடும் விறலியர் பலர் உள்ளனர் எனவும் அவர்கள் தனது இனிய குரலால் பாடி பரிசாக பிடி யானைகளை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆடு சிறை அறுத்து நரம்பு சேர் இன் குரல்
பாடு விறலியா பல படி செய்க

பாலை பண்ணை மாறி மாறி இசைத்தார் போல என்ற வரிகளின் மூலம் பாலை பண்ணை யாழில் இசைத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

பரிபாடலில் பாணர்கள் பற்றிக் குறிப்பிடுகையில் நல்ல முறையில் யாழிசைக்கும் பாணனாகப் போற்றப்படுகிறான். அறுபடை வீட்டில் ஒன்றான திருப்பரங்குன்றத்தின் ஒரு பகுதியில் பாணர்கள் மீட்டும் யாழின் இசைக்கருவிகள் ஒலித்துக்கொண்டே இருக்கும் எனவும், நட்டபாடை என்னும் பண்ணினை யாழ் நரம்புகளை மீட்டி இசைக்கும் பாணன் பற்றியக் குறிப்பும் காணப்படுகிறது. மேலும் யாழின் பாகங்களை பற்றியும் காணப்படுகிறது.

புரிநரம் பின்கொளைப் புகல்பாலை ஏழும்
எழும்புணர் யாழும் இசையும் கூடக்
குழலளந்து நிற்ப முழவெழுந் தார்ப்ப
மன்மகளிர் சென்னியர் ஆடல் தொடங்க(பரி:**7:77-80)**

கலித்தொகையில் யாழின் உன்னதமான இசையைக் கேட்டு திருமால் பள்ளி கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. பெண்ணைப் பற்றி செவிலித்தாய் கூறும் பொழுது யாழ் நரம்புகளோடு மிட்டி ஒலிக்கும் இசையோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

அகநானூற்றில் ‘நரம்பு ஆர்த்தன்ன’ என யாழின் நரம்பொலி பற்றிய செய்தி காணப்படுகிறது. யாழின் இசையினை வண்டின் ரீங்காரத்தோடு ஒப்பிட்டு கூறுகின்றனர்.

புறநானூற்றில் 'சீரியாழ் செவ்வழிப் பண்ணி வந்தனை' என கூறுவதன் மூலமாக செவ்வழிப்பண்ணை சீறியாழில் இசைத்து வந்தனர் என அறிய முடிகிறது. மேலும் வணர்க்கோட்டு சீறியாழ் என்பதன் மூலம் சீறியாழ் வளைந்த அமைப்பைக் கொண்டது என்பதையும் அறிய முடிகிறது.

**சான்றாதாரங்கள் :**

1.பத்துப்பாட்டு மூலமும் உரையும் - டாக்டர்.வே.சாமிநாதய்யர் - தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் - 1986.

2.தமிழர் இசை – டாக்டர்.ஏ.என்.பெருமாள் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 1984.

3.தொல்காப்பியத்தில் இசைக் குறிப்புகள் - முனைவர்.வீ.பா.க.சுந்தரம் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 1994.

4.இன்பத்தமிழ் இசைக் கருவிகள் - டாக்டர் புரட்சிதாசன் - பசும்பொன் பதிப்பகம், சென்னை – 1998.

5.இசை நூல் - பேரா.ப.பாலகிருஷ்ணன் - ஜியார் எண்டர்பிரைசஸ், சென்னை – 1986.